# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.

**CC.No. 493/2023 Date: 07.11.2025**

**PW 1 : திரு.முருகன் த/பெ. வையாபுரி**

துவக்க நேரம் 03.20 A.N

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**

1) சம்பவத்தன்று நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் எனக்கு சொந்தமான வாகனம் என்று சொன்னால் சரிதான். இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுனர் உரிமம் எனக்கு இல்லை என்று சொன்னால் சரிதான். பொதுவாக ஒரு இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் தான் பயணம் செய்ய முடியும் என்றும், அதற்கு மேல் சென்றால் அது சட்டப்படி குற்றம் என்றும் சொன்னால் சரிதான்.

2) விபத்தில் இறந்த எனது சகோதரி ருக்குமணி என்பவருக்கு வயது 70 இருக்கும் என்று சொன்னால் சரிதான். சம்பவத்தன்று நான், எனது இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு, எனக்கு பின்னால் என் மனைவியும், அவருக்கு பின்னால் எனது சகோதரி ருக்குமணியும் அமர்ந்து மூன்று பேர் பயணித்தோம் என்று சொன்னால் சரிதான்.

3) எனக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தது என்று சொன்னால் சரிதான். நான், ஓட்டிச்சென்ற பைக்கின் பின்புறம் மற்றொரு பைக் மோதியதால்தான், என் வாகனத்திற்கு பின்புறம் சேதாரம் ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த நேரமானது இருட்டான நேரமா என்றால் ஆமாம்.

4) சம்பவத்தன்று நாங்கள் மூன்று பேர் என்னுடைய இருசக்கர வாகனத்தில் பயணம் செய்ததால், என்னால் பேலன்ஸ் செய்யமுடியாததால் நாங்கள் தவறி கீழே விழுந்ததில் எங்கள் மூவருக்கும் அடிபட்டது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கீழே விபந்தவுடன் அக்கம் பக்கம் இருந்தவர்கள்

உடனே அங்கு வந்துவிட்டார்களா என்றால் இல்லை, நான் மயக்கமாகி, அரைமணிநேரம் கண்விழித்து நான் தகவல் கொடுத்துதான் அக்கம் பக்கம் இருந்தவர்கள் வந்தார்கள். நான், வாகனத்திற்கு பின்னால் வந்த வாகனம், என் வாகனத்தில் பின்னால் மோதியதால்தான் எனது வாகனத்தின் பின்புறம் சேதாரம் ஏற்பட்டுள்ளது என்று தவறாக சொல்கிறேன் என்றும், உண்மையில் என் வாகனத்தின் பின்புறம் எந்த சேதாரமும் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

5) ஆத்துார், அரசு மருத்துவமனையில் வைத்து, போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் விசாரித்தார்கள், நான் கையெழுத்து போடமுடியாத சூழ்நிலை இருந்ததால் இரண்டு நாட்கள் கழித்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6) விபத்து ஏற்பட்டவுடன், எனக்கு பின்னால் வந்த வானத்தின் ஓட்டுனரான பீமன் என்பவர் எனக்கு உதவி செய்யத்தான் வந்தாரே தவிர, அவர், என்னுடைய வாகனத்தின் மீது மோதவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான், எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 03.29 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.11.07 17:23:50 +0530

Judicial Magistrate No.2, Attur.

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.</u>**

**CC.No. 493/2023 Date: 07.11.2025**

**PW 2 : திருமதி.சாந்தி க/பெ. முருகன்**

துவக்க நேரம் 03.30 A.N

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**

1) சம்பவத்தன்று எனது கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் எங்களுக்கு சொந்தமான வாகனம் என்று சொன்னால் சரிதான். இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான ஓட்டுனர் உரிமம் எனது கணவருக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல, இருக்கிறது. அந்த ஓட்டுனர் உரிமத்தை, நாங்கள் போலிசாரிடமோ, மோட்டார் வாகன ஆய்வாளரிடமோ ஒப்படைத்துள்ளோமா என்றால் இல்லை.

2) சம்பவத்தன்று எனது கணவர், தலைக்கவசம் அணிந்து வாகனத்தை ஓட்டினாரா என்றால் இல்லை. பொதுவாக ஒரு இருசக்கர வாகனத்தில் இரண்டு நபர்கள் தான் பயணம் செய்ய முடியும் என்றும், அதற்கு மேல் சென்றால் அது சட்டப்படி குற்றம் என்றும் சொன்னால் சரிதான். சம்பவத்தன்று எனது கணவர் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு, அவருக்கு பின்னால் நானும், எனக்கு பின்னால் எனது நாத்தனாரும் அமர்ந்து மூன்று பேர் பயணித்தோம் என்று சொன்னால் சரிதான்.

3) எனது கணவர் ஓட்டிச்சென்ற பைக்கின் பின்புறம் மற்றொரு பைக் மோதியதால்தான், எங்கள் வாகனத்திற்கு பின்புறம் சேதாரம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல, வாகனத்திற்கு எந்த அடியும் ஏற்படவில்லை, எனக்கு பின்னால் அமர்ந்திருந்த எனது நாத்தனார் வண்டியில் இருந்து கீழே குப்புற விழுந்த நிலையில் கிடந்தார், எனது வலதுபக்க மண்டை உடைந்துவிட்டது, வலதுபக்க கை மணிக்கட்டில் எலும்பு முறிவு ஏற்பட்டது, எனது கணவரின் வலதுபக்க தலை, வலதுபக்க தோள்பட்டை மற்றும் சில இடங்களில் சிராய்ப்பு

காயம் ஏற்பட்டிருந்தது, வண்டிக்கு எந்த சேதாரமும் ஏற்படவில்லை. பொதுவாக ஒரு வாகனத்தின் பின்னால் வந்த வண்டி முன்னால் சென்ற வண்டியின் மீது பின்பக்கம் மோதினால் சேதாரம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று சொன்னால் சரிதான், ஆனால் நாங்கள் சென்ற வண்டியில் அவ்வாறு சேதாரம் எதுவும் ஏற்படவில்லை.

4) சம்பவத்தன்று நாங்கள் மூன்று பேர் எங்களுடைய இருசக்கர வாகனத்தில் பயணம் செய்ததால், என்னால் பேலன்ஸ் செய்யமுடியாததால் நாங்கள் தவறி கீழே விழுந்ததில் எங்கள் மூவருக்கும் அடிபட்டது என்று சொன்னால் சரியல்ல, பின்னால் வந்த வண்டி எங்கள் மீது இடித்ததால்தான் விபத்து ஏற்பட்டது.

5) என் கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்ட உரிமம் இல்லாததால், எனது கணவருக்கு சரியாக இருசக்கர வாகனம் ஓட்ட தெரியாமல், எங்கள் இருவரையும் பின்னால் உட்கார வைத்துக்கொண்டு வண்டி ஓட்டத்தெரியாமல் ஓட்டியதால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது நாத்தனாரை, எனது கணவர் இருசக்கர வாகனத்தில் ஏற்றிய பின் எவ்வளவு துாரத்தில் இந்த விபத்து நடந்தது என்று சொன்னால் சுமார் 40 அடி துாரம் சென்றவுடன் பின்னால் வந்த வண்டி, எங்கள் மீது மோதி விபத்து ஏற்பட்டது.

6) விபத்து நடந்த சாலை அதிகம் வண்டி, வாகனங்கள் செல்லும் ரோடு என்று சொன்னால் சரிதான். எனது கணவர், கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 03.39 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.11.07 17:23:58 +0530

Judicial Magistrate No.2, Attur.